www.padippakam.com

# மனித உரிமைப் போருக்கு ஆதரவுதாரீர்.

18 மாதங்களுக்கு மேல், மனிதநேயமற்றமுறையில் சிறையில் அடைத்து
கொடுமைப்படுத்தும்- ஸ்ரீலங்கா அரசே !
அப்பாவி மக்கள், மாணவர்கள், அரசியல் கைதிகளை..

# விசாரணை செய், அல்லது விடுதலை செய் !

**சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்.**

கடந்த 08/08/85 முதல் நியாயமான, அடிப்படைக் கோரிக்கைகளான;

1. 18 மாதங்களுக்கு மேல் விசாரணையின்றி அடைத்து வைக்கமுடியாது என்ற சட்டத்தைமீறி, சிறையில் அடைத்துவைத்திருக்கும், தமிழ் இளைஞர்களுக்கு;
   அ) கைதிகள் அந்தஸ்தை வழங்கு,
   ஆ) விசாரணை செய்,
   இ) அல்லது விடுதலை செய்,

2. தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு அளிக்கப்படல் வேண்டும்.

என்பவற்றை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்துள்ளனர்.

**மூவர் மூவராக மடிவோம்.**

இப்போராட்டத்தில் இறக்க நேரிடினும், மேலும் மூவராக நியாயம் கிடைக்கும் வரையில் போராடுவோம் என, இப்போராட்டத்தை ஆரம்பித்தவர்கள்- பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த- சுரேஸ், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த -கனகரத்தினம், மலையகத்தைச் சேர்ந்த- கருணாகரன் ஆகிய மூன்று மறவர்களாவர்.
விடிவை நோக்கிய இவர்களின் போராட்டத்தினிடையே, பெரும் சுகவீனமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்பு, மற்றும் மூன்று மறவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

**ஆதரவுதேடி உலகநாடுகளைக்கோரும்- போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால்கள், — தமிழீழத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஏற்பாடு.**

கடந்த 28/8/85 அன்று, வடபகுதியெங்கும் கடைகள், பாடசாலைகள், பொது/தனியார் ஸ்தாபனங்கள் அனைத்தும் மூடப்பட்டு, மாணவர்கள், அரச/தனியார் ஊழியர்கள், தமது அலுவல்களை பகிஷ்கரித்து, பூரணஹர்த்தால் அனுஷ்டித்துள்ளனர்.
குருநகரில் இருந்து யாழ்ப்பாணம் வரை, பெரும் ஊர்வலமொன்று, ஏராளமான மக்கள் பங்களிப்பில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது. இவை அனைத்தும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினால் நடாத்தப்பட்டுள்ளது.
மேலும் உலகளாவிய ரீதியில் அனைத்துத் தமிழ் மக்களின் பங்களிப்போடும், ஸ்ரீலங்கா வெங்கொடுமைச்சிறையில், நாளாந்தம் சித்திரவதைப்பட்டு தவித்துக்கொண்டிருக்கும், எம் உடன்பிறப்புகளின் இவ்ஜீவமரணப்போராட்டத்திற்கு ஆதரவுதேடி,

## பெரும் போராட்டங்கள் நடாத்த

# உலகத்தமிழினமே ஆதரவு தாரீர் !

படிப்பகம்

www.padippakam.com

யாழ். குடாநாட்டில் தமிழ் இளைஞர்கள்

# விடுதலை செய்யக்கோரி 2மணி நேர வெளிநடப்புக்கு முஸ்தீபு

## 'புளொட்' இயக்கம் பகிரங்க வேண்டுகோள்

(யாழ். அலுவலக நிருபர்)

சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை அரசு விடுதலை செய்ய வேண்டும். அல்லது விசாரணை செய்ய வேண்டும் எனக்கோரிதமிழ் மக்கள்விடுதலைக் கழகம் (புளொட்) எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை யாழ்குடா நாட்டில் இரண்டுமணி நேர வெளி நடப்பை மேற்கொள்ளுமாறு சகல அரச உத்தியோகத்தரையும் கோரியுள்ளது.

இது சம்பந்தமாக அக்கழகம் விடுத்துள்ள துண்டுப் பிரசுரத்தில்'தமிழ் மக்களை திட்டமிட்டு கோழைத்தனமாக கொலைசெய்துவரும்இந்தஅரசு தொடர்ச்சியாக தனது கையாலாகாத் தனத்தை அப்பாவித் தமிழ் மக்கள் மீதும் பிற கைதிகள் மீதும் காட்டி வருகிறது' என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

'இன்று பேச்சுவார்த்தை என்ற பெயரில் தனது தவறுகளை உலக அரங்கில் மறைப்பதற்கு முற்பட்ட இவ்வரசு அதனையும்மீறி காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்தி தனது கீழ்த்தரமான செயலை உலக அரங்கில் நிருபித்துள்ளது.

இந்த வகையில் 18 மாதங்களுக்கு மேலாக சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் அப்பாவி மக்களுக்கும், மாணவர்களுக்கும், அரசியல் கைதிகளுக்கான அந்தஸ்தை வழங்கி அவர்களை விசாரணை செய்ய வேண்டும். அல்லது விடுதலை செய்ய வேண்டும் இந்தக் கோரிக்கையை முன்வைத்து 8-8-85ஆம் திகதியில் இருந்து உண்ணாவிரதம் இருந்துவரும் தங்காலை சிறைக் கைதிகள் சிலர் கொலை செய்யப்பட்டும் மேலும் மூவர் காயங்களுடன் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றனர் எனவும் அறிகிறோம்.

மனித நேயமற்ற இச் செயலை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது. கொலை செய்யப்பட்டவர்களின் பெயர், விபரங்களை வெளிப்படுத்தக் கோரியும் அவர்களது நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தும் புதன்கிழமை காலை 10மணியிலிருந்துபகல் 12மணிவரையில் இரண்டு மணி நேர வெளி நடப்பை செய்யுமாறு அரசாங்க, தனியார் நிறுவனங்களின் ஊழியர்களையும், போக்குவரத்து, கல்விச்சேவைகளையும் சேர்ந்த ஊழியர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ் மக்களும் நியாயம் விரும்பும் சிங்கள தோழர்களும் இப் போராட்டத்திற்கு ஆதரவுதர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

வீரகேசரி—

26.08.85.

# வவுனியாவில் நேற்று திடீர் ஹர்த்தால்! வாகனப்போக்குவரத்துகள், அலுவலகங்கள் ஸ்தம்பிதம் இடையிடையேகுண்டுகள்வெடிக்கப்பட்டன

(வவுனியா நிருபர் பி. மாணிக்கவாசகம்)

வவுனியாவில் நேற்று ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டதை அடுத்து போக்குவரத்துச் சேவைகளுட்பட அனைத்து அரசாங்க அலுவலகங்களும், கூட்டுத்தாபனங்களும் ஸ்தம்பிதமடைந்தன.

நகரிலுள்ள கடைகள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டிருந்ததுடன் பொதுமக்களின் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தது. ஆங்காங்கே குண்டு வெடிப்புச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் சிறைச்சாலையிலுள்ள தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்அல்லது அவர்கள் மீது விசாரணைகள் நடைபெற வேண்டும். எனக் கோரிதமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்) மேற்படி ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்திருந்ததாக தெரிய வந்துள்ளது.

அதற்கு அனுசரணையாக வவுனியா நகர் எங்கும் பரவலாக சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. வீதிகள், தெருவோரச் சுவர்களிலெல்லாம் சிவப்பு மையினால் தமிழில் எழுதப்பட்டிருந்தன.

"வதை முகாம்களில் போராடும் எமது தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு; சிறைச்சாலையிலுள்ள இளைஞர்களை விடுதலை செய் அல்லது விசாரணை செய். தங்காலை, வெலிக்கடைச் சிறைச் சாலைகளில் போராடும் இளைஞர்களுக்கு எமது பூரண ஆதரவு — என்றெல்லாம் சுவரொட்டிகளிலும், சுவர்களிலும், வீதிகளிலும் சிவப்பு மையினால் எழுதப்பட்டிருந்தன.

வீரகேசரி—

27.08.85.

## ஹர்த்தால் எதிரொலி

# *வவுனியாவுடன்'இன்டர்சிற்றி கொழும்பு திரும்பியது

## *யாழ்தேவி திருப்பியனுப்பப்பட்டது

# *வட பகுதியில் கண்டன ஊர்வலங்கள்

Published by People's Liberation Organisation of Thamil Eelam;
46 Central Road, Worcester Park, Surrey KT4 8HY, UK

படிப்பகம்